# சைவசித்தாந்த ஆன்ம விடுதலையில் ஆன்மிகச் சுற்றுலாவியலின் வகிபங்கு

# The Role of Spiritual Tourism in Saiva Siddhanta Liberation of Soul

கு. தவசீலன் / K. Thavaseelan[1]
முனைவர் எஸ். கேசவன் / Dr. S. Kesavan[2]

Date of submission: 2023-11-21
Date of acceptance: 2023-12-26
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name:
Mr. K. Thavaseelan
Email: seelank900@gmail.com

**Abstract**

Saiva Siddhanta, which originated in India, states the threefold truths of Pati, Pasu, and Pasam, and is seen as the ultimate goal of Saivism and the guiding philosophy of Saivite life. Although it originated in the Vedic period, there are clear concepts in the Twelve Tirumurais and the Fourteen Meikanda Satras. One of its main features is ' liberation of soul'. Liberation of the soul is the liberation of the soul from the affections and the attainment of Padhi. The means of attaining it through practical life are explained by the temples which are spiritual tourism centers. Therefore, this review is carried out under the title 'The Role of Spiritual Tourism in Saiva Siddhanta Liberation of Soul' with the aim of revealing the contribution of spiritual tourism to achieve the concepts of liberation of soul found in Saiva Siddhanta.

**Keywords:** Saiva Siddhanta, Liberation of soul, Temples, Culture, Spiritual tourism

### அறிமுகம்

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்குகின்ற சித்தாந்தமானது தொன்மையான வரலாற்றைக் கொண்டு திகழ்கின்றமையைக் காணலாம். இது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை விளக்கி நிற்பனவாகவும், வைதிக நெறியாகவும், சிவத்தை அடைவதனையே ஒவ்வொரு ஆன்மாவின் விடுதலையாகவும் குறிப்பிடுகிறது (செல்வமனோகரன், 2017, ஜீ.157). இத்தகைய ஆன்ம விடுதலை பற்றிய கருத்தியலைச் செம்மைப்படுத்துவதில் ஆன்மிகச் சுற்றுலாவியல் பாரிய பங்களிப்பினைச் செலுத்துகின்றது. இதன் பிரதான மையங்களாக ஆலயங்களே விளங்குகின்றன. இத்தகைய ஆன்மிகச் சுற்றுலாவியல் நடைமுறை வாழ்வியலில் சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆன்ம விடுதலை குறித்த கருத்தியலுக்கு எத்தகைய பங்களிப்பினை ஆற்றுகின்றது என்பதனை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக அமைகிறது. அந்த வகையில் சைவசித்தாந்தத்தில் ஆன்ம விடுதலையும் ஆன்மிகச் சுற்றுலா மையங்களாக

[1]The auther is PhD Scholar in the Faculty Post Gratuat studies, Eastern University, Sri Lanka, seelank900@gmail.com

[2]The auther is a Head in the department of Hindu Civilization, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka, kesavans@esn.ac.lk

விளங்கும் ஆலயம் சார் வழிபாடும் நடைமுறையில் எமது வாழ்வியலோடு அது பிணைந்துள்ளவற்றையும் ஆன்மிகச் சுற்றுலாவியல் ஊடாக இக்கட்டுரை காணவிளைகிறது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முதன்மைத் தரவுகளாக மெய்கண்ட சாத்திரங்களையும், இரண்டாம் நிலைத் தரவுகளாக சைவசித்தாந்த ஆன்ம விடுதலை மற்றும் ஆன்மிகச் சுற்றுலா சார்ந்து வெளிவந்த நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டும் கட்டமைக்கப்படுகிறது. அடிப்படையில் இது விபரண ஆய்வாகவே அமைகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்று ஆய்வு முறையும், நேரடி அவதானிப்பு முறையும் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு முறையியலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொருத்தமான விடயங்களுக்கு மாத்திரம் அடிக்குறிப்பு இணைக்கப்பட்டிருக்கின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

ஆன்மிகச் சுற்றுலாவியல் பற்றித் தெளிவுபடுத்துவதற்குரிய பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அந்தவகையில் மா. மதிவேந்தன் அவர்கள் 2021 இல் எழுதிய சுற்றுலா என்ற நூலிலே சுற்றுலாவின் வகைகள் பற்றியும் இந்தியாவில் சுற்றுலாவின் வளர்ச்சி பற்றியும் அராயப்பட்டுள்ளன. வே. திருநாவுக்கரசு அவர்களால் 2014 இல் எழுதி கலாநிதிப் பட்டத்திற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ‘இலக்கியம் காட்டும் சுற்றுலா மையங்கள் ஓர் ஆய்வு’, என்ற தலைப்பில் அமைந்த ஆய்விலே சுற்றுலா என்பதன் பொருள் பற்றியும் அதன் வகைகள் பற்றியும் இலக்கியங்களில் காணப்படும் சுற்றுலா பற்றிய செய்திகளும் அலசி ஆராயப்பட்டுள்ளன. துஹயா பேரானந்தம் அவர்கள் 2022 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நடைபெற்ற முதலாவது சர்வதேச இந்துமாநாட்டு மலருக்கு எழுதிய ‘இந்து கலாசார சுற்றுலாவியல்’ என்ற ஆய்வுக் கட்டுரையிலே வலிகாமம் மேற்கில் காணப்பட்ட சுற்றுலா மையங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன. குறித்த மலரிலே ஜீ. பால்ராஜ் மற்றும் ச. முகுந்தன் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய ‘இலங்கையில் இராமாயணச் சுற்றுலா மையங்கள்’ என்ற தலைப்பில் அமைந்த ஆய்வுக் கட்டுரையிலே இலங்கையில் காணப்பட்ட இராமாயணச் சுற்றுலா மையங்கள் மாத்திரமே அலசி ஆராயப்பட்டுள்ளன. ஆனால் ‘சைவசித்தாந்த ஆன்ம விடுதலையில் ஆன்மிகச் சுற்றுலாவியலின் வகிபங்கு’ தொடர்பாக இதுவரை எந்தவொரு ஆய்வும் வெளிவரவில்லை ஆகவே அதனை இவ்வாய்வு நிறைவு செய்ய முற்படுகிறது.

## சைவசித்தாந்தத்தில் ஆன்ம விடுதலை

ஆன்மா உலகியலில் இருந்து விடுபட்டு இறைவனின் திருவடியை அடைவதனையே சைவசித்தாந்தம் ஆன்ம விடுதலை எனக் குறிப்பிடுகின்றது. இதனை அருணந்திசிவாச்சாரியார் ‘சிவனடியை சேருமுத்தி செப்புவதிங் கியாமே’ (*சிவஞானசித்தியார், 2010, பா.264*) எனக் குறிப்பிடுதல் காணலாம். சைவசித்தாந்தத்தில் இடம்பெறுகின்ற ஆன்ம விடுதலையையே விடுதலை, முத்தி, வீடுபேறு என்கின்ற சொல்லாட்சி குறித்து நிற்பன ஆகும். சைவசித்தாந்திகளின்படி அநாதியான ஆன்மா மலங்களின் பிணிப்பினால் தன்னறிவும் சிவனறிவும் மழுங்கடிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகின்றது. மலநீக்கவழி ஆன்மா சிவனைச் சாருகின்றது. ஆன்மா மலத்தைச் சாருகின்ற தன்மைக்குக் கன்மம் அடிப்படையானதாக அமைகின்றது. ஆன்மாக்கள் மாயா காரியங்களான தனு, கரண, புவன போகங்களை முறையாகப் பயன்படுத்தும் தூரத்திலே விடுதலைக்குரிய பாதை தெளிவிற்குரியதாகிறது. சித்தாந்தமானது மாயை அளிக்கும் சரீரங்களும் சரீர சம்பந்தங்களும் மயக்கங்களை அளிக்கவல்லதென எடுத்தாளுகின்ற போதிலும் இவை ஆன்மாக்களின் விடிவுக்கு உதவும் ஒளியாக திகழ்கிறது என்கிறது. இதனை, ‘மாயா தனு விளக்காய்’ (*வேதநாதன், 2009,* p.*41*) என மெய்கண்ட தேவரும், ‘விடிவாமளவும் விளக்கணைய மாயை…..’ (திருவருட்பயன், *இருள்மலநிலை, பா.10*) என உமாபதி

சிவாச்சாரியாரும் சுட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஆன்மாக்கள் மலங்களினால் பந்திக்கப் பட்டதன் காரணமாக அறியாமைக்குட்பட்டு பிறவிக்குட்படுகின்றது. இப்பிறவித் துன்பத்திலிருந்து விடுபடுவதே அவற்றின் உயர் இலட்சியமாகும். இதனை அடைவதாயின் ஆன்மாக்கள் தாம் செய்யும் வினையினின்றும் அறியாமையில் இருந்தும் விடுபடல் வேண்டும். ஆன்மாக்களின் அறிவை மறைத்து அறியாமையை கொடுப்பது ஆணவமலம் ஆகும். ஆணவமலம் பரிபாகம் அடையும் போதுதான் ஆன்மா இறைவனது அருளைப் பெறமுடியும். இதற்குரிய வழியாக சைவசித்தாந்தம் சிறப்பாக சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற நால்வகை மார்க்கங்களைக் கூறி அதன்வழி இறைவனை அடைதல் சாத்தியம் எனக் கூறுகின்றது (செல்வமனோகரன், 2017, ஜீ.163). சைவசித்தாந்தம் குறிப்பிடும் விடுதலையடைவதற்குரிய வழி முறைகளை நடைமுறை வாழ்வியலிலே ஆன்மிகச் சுற்றுலாவியல் சார்ந்த பயணத்தின் மூலமாகக் கடைப்பிடிக்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

### ஆன்மிகமும் சுற்றுலாவியலும்

ஆன்மா என்பது உயிரைக் குறிக்கும். துன்பம் நீங்கி இன்பமுடன் வாழ வேண்டி உயிருக்காகச் செய்யப்படும் புண்ணியச் செயலே ஆன்மிகம் ஆகும். ஆன்ம+இகம் எனப் பிரித்து ஆன்மக் கொள்கைகளின் பிழிவுச்சாரமே ஆன்மிகம் எனப் பொருள் கொள்வர். இச்சொல்லானது ஆன்மாவின் விடுதலை; ஆன்மா மீண்டெழும் நிலை; ஆன்மா மேம்படல் என்றவாறு பொருள் தரும் (தினமணி, 28, ஆனி 2015, ஜீ.1) எவ்வாறெனில், உலகில் ஒவ்வொரு ஆன்மாவும் தாம் செய்த வினைகளுக்கு ஏற்ப, பல்வேறு பிறவிகளாக இறைவனால் மண்ணில் தோற்றுவிக்கப்பெறுகின்றன. இதன் நோக்கம் பிறவி எடுத்தலில் இருந்து மீண்டும் மீண்டும் பிறவாத நிலை பெறுவதற்கே ஆகும். அவ்வாறு ஆன்ம விடுதலை நோக்கிய பயணமே ஆன்மிகம் ஆகும்.

ஆன்மிகத்தை மேம்படுத்துவதில் சுற்றுலாவியல் பெரும் பங்களிப்பைச் செய்து வருகிறது. சுற்றுலா என்பது ஒரு புரதான நிகழ்வு ஆகும். இது ஆரம்ப காலங்களில் இருந்தே காணப்படுவதாக அறிஞர்கள் குறிப்பிடுவர். தமிழில் முன்பு செலவு, பயணம், தீர்த்த யாத்திரை, சேத்திராடனம் என்னும் சொற்களைப் பயன்படுத்தி வந்தனர். இன்று அவை அனைத்தும் உள்ளடக்கி சுற்றுலா என்று அழைக்கப்படுகிறது (திருநாவுக்கரசு, 2014, p.8). சுற்றுலா என்பது ஆங்கிலத்தில் Tourism என்று அழைக்கப்படுகிறது. இச்சொல் Tour என்ற வார்த்தையிலிருந்து வந்தது. இது Tornos என்ற இலத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது ஆகும். டோர்னஸ் என்ற இலத்தீன் வார்த்தை சக்கரத்தினைக் குறிப்பது அதாவது சுற்றி வருவதைக் குறிப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர் (தங்கமணி, 2006, p.2).

சுற்றுலா குறித்து பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சுற்றுலா என்பது மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு ஓய்வினைக் கழிப்பதற்காக, பொழுது போக்கிற்காக, கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்காக மேற்கொள்ளப்படுகின்ற பயணமாகும். (சந்திரசேகரம், முகமட் முஸ்தபா, சசிவதனி, 2013, ஜீ.7) ஓய்வு என்ற அடிப்படையிலேயே இச்சுற்றுலாத்துறையானது தோற்றம் பெற்றது எனக் கூறப்படுகிறது. சுற்றுலா என்பது ஒருவர் தான் வாழ்ந்து வரும் அல்லது பணிபுரிந்து வரும் இடத்திலிருந்து வெளியிடத்திற்குக் குறுகிய காலமே சென்று தங்கி அங்கு பல இடங்களுக்கு இன்பப் பயணம் சென்று பார்த்து வருவதாகும்" என்று 1976 இல் சுற்றுலாவிற்கு இங்கிலாந்து சுற்றுலாக்கழகம் விளக்கம் தந்ததாகக் குறிப்பிடுவர் (தங்கமணி, 2006, ஜீ.4).

சுற்றுலாவியல் என்ற சொல்லுக்குச் சமஸ்கிருத இலக்கியத்தில் பரயத்ன (மகிழ்ச்சிக்காக, அறிவை வளர்த்துக்கொள்வதற்காக வெளியே செல்லுதல்), தேசத்னா (பொருளாதாரப் பயனுக்காக வெளியே செல்லுதல்), தீர்த்தாத்ன (சமயச் சிறப்புடைய புனித இடங்களைப் பார்ப்பதற்காகச் செல்லுதல்) என மூன்று

சிறப்புச் சொற்கள் (ஷிலீவீஸீணீ, 1998, ஜீஜீ.61 62) மூலமாக விளக்கப்பட்டுள்ளன.

பொதுவாக சுற்றுலா என்பது 'சுற்றிப்பார்த்தல்' அல்லது 'ஓர் இடத்தில் இருந்து இன்னுமோர் இடத்தினைப் பார்வையிடப் பயணமாதல்' எனச் சுருக்கமாக வரையறை செய்ய முடியும். இவ்வாறான சுற்றுலாவின் வகைகளாக ஆன்மிகச் சுற்றுலா, வியாபாரச் சுற்றுலா, கலாசாரச்சுற்றுலா, பொழுதுபோக்குச் சுற்றுலா, மருத்துவச்சுற்றுலா, சரித்திரச் சுற்றுலா, கடற்கரைச் சுற்றுலா, கல்விச்சுற்றுலா, இன்பச்சுற்றுலா, பண்பாட்டுச் சுற்றுலா, விவசாயச் சுற்றுலா மரபுரிமைச் சுற்றுலா எனப் பல வகைப்படுகின்றது (மதிவேந்தன், 2021, p.2). இவற்றுள் முக்கியமான சுற்றுலா வகையாக ஆன்மிகச் சுற்றுலா காணப்படுகிறது.

ஆன்மிகச் சுற்றுலா என்பது தாங்கள் விரும்பும் வழிபாட்டுத் தலங்களுக்கு விரும்பிச் செல்லும் பயணம் ஆகும். குறிப்பாக ஒவ்வொரு ஆலயமாகச் சென்று இறைவனைத் தரிசித்தல், மூர்த்தி, தல, தீர்த்த, அடியார் வழிபாடுகள் செய்தல் என்பனவாகும். அதாவது ஆன்மாவின் இன்பம் விடுதலை கருதிச் சென்று வழிபடல் ஆன்மிகச் சுற்றுலா எனப்படும். இது நடைமுறை வாழ்வியலில் பெரிதும் முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றது.

## ஆன்ம விடுதலையில் ஆன்மிகச் சுற்றுலாவியலின் வகிபங்கு

சைவசித்தாந்தம் ஆன்மாவின் துன்பம் நீங்கி இன்பம் பெறும் இடமாக இறை திருவடியைச் சுட்டி நிற்கிறது. அத்தகைய இறைவன் வீற்றிருக்கும் ஆலயமே இந்து ஆன்மிகச் சுற்றுலாவின் பிரதான மையங்களாக விளங்குகின்றன. அதனைத் தரிசிக்கின்ற போது சைவசித்தாந்தம் குறிப்பிடும் ஆன்ம விடுதலையோடு தொடர்புபட்டுள்ளவாற்றினை பின்வரும் விடயங்கள் ஊடாகப் பார்க்க முடிகிறது.

## ஆலயமும் சுற்றுலாவியலும்

ஆன்மிகச் சுற்றுலாவியலின் பிரதான மையங்களாக விளங்கும் ஆலயங்களே இறைவன் வீற்றுருந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் இடங்களாகும். இந்த இறைவனின் அருள் இல்லாது ஆன்மாக்கள் மலங்களில் இருந்து விடுதலை பெற முடியாது என்பதனை மெய்கண்டாரும் 'அவனருளாலல்லாது ஒன்றையும் செய்யானாகலே' எனச் சுட்டி நிற்றல் காணலாம். இதனையே கந்த புராணமும் "அவனருள் பெறாது முத்தி யடைந்தன ரில்லை ஞ்" (கணபதிப்பிள்ளை, 1967, ஜீ.21) எனும் செய்யுளின் ஊடாகவும் விளக்கி நிற்கிறது. ஆகவே ஆன்மாக்கள் அவன் அருள் பெருவதற்காக ஆலயம் செல்ல வேண்டியது இன்றியமையாதது ஆகும். அதற்குரிய அடித்தளத்தை நடைமுறை வாழ்வியலில் ஆன்மிகச் சுற்றுலாவியல் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, ஆன்மிகச் சுற்றுலா எனும் பெயரில் ஆலயங்களைத் தரிசிப்பதற்காக அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலர் பயணம் மேற்கொள்கிறார்கள். இந்து சமயத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல ஏனைய சமயத்தவர்களும் ஆன்மிகச் சுற்றுலாக்களை மேற்கொண்டு வருவதனைக் காணமுடிகிறது.

ஆன்மாக்கள் விடுதலை அடைய வேண்டுமாயின் தாம் செய்த பாவங்களில் இருந்து விடுபட வேண்டும். ஆகவே பாவங்களில் இருந்து விடுபடுவதற்கு ஆலய தரிசனம் இன்றியமையாத அம்சமாகக் காணப்படுகிறது. இதனால் தான் ஆன்றோர்கள் 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பார்கள் (சுப்புரெட்டியார், ந., 2004, ஜீ.376). இத்தகைய ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. இதில் இறைவனின் வீரச் செயல்களையும் திருவிளையாடல்களையும் காட்டுகின்ற உருவங்களும் இறைவனைத் தொழுகின்ற திருமால் முதலிய தேவர்களின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காணும்பொழுதெல்லாம் இறைவனின் முழுமுதல் தன்மையை உணர்ந்து அவரின் மேல் அன்பு செலுத்த வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும் (கேசவன், 2021, ஜீ.31). அதனைத் தொடர்ந்து இறைவனை

வழிபடுகின்ற அடியவர்கள் மீதும் அன்பு செலுத்துவதற்கும் விருப்பம் ஏற்படும். அடியார்கள் மீது அன்பு கொண்டால் இறைவன் மீது அன்பு கொண்டதற்குச் சமமாகுமெனச் சைவசித்தாந்தம் விளக்கி நிற்கிறது. இதனையே "அடியவர்க்கு அன்பிலார் ஈசனுக்கும் அன்பிலார்ஞ்" என வரும் சிவஞானசித்தியார் பாடல் மூலமும் "செம்மலர் நோந்தாள் சேரல் ஒட்டா அம்மலம் கழீஇ அன்பரோடும் மருஇ..." (சிவஞானபோதம், சூத்திரம்.12.) என்ற சூத்திரம் ஊடாகவும் ஆன்ம விடுதலைக்கு அடியார் வழிபாடும் முக்கியம் என்பதனைத் தெளிவுபடுத்தி நிற்கிறது. இவையனைத்தும் ஆன்மிகச் சுற்றுலா மூலம் நடைமுறை வாழ்வியலில் சாத்தியப்படுகின்றமையினை அவதானிக்க முடிகிறது.

## தீர்த்தமும் சுற்றுலாவியலும்

சுற்றுலா மையங்களாக விளங்கும் பெரும்பாலான ஆலயங்களில் தீர்த்தக்கேணிகள் அமைந்திருக்கின்றன. அத்தகைய தீர்த்தங்களில் நீராடுவதன் மூலம் தாம் செய்த பாவங்களில் இருந்து விடுதலை பெறமுடியும். உலகில் பலர் தீர்த்த யாத்திரைகளை தொன்று தொட்டு மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதனை "தீது நீங்கக் கடலாடியும் மாசு போகப் புனலாடியும்" என வரும் பட்டினப்பாலை (மறைமலையடிகள், 1966, பா.99100) வரியின் மூலமாகவும் இலங்கையில் உள்ள நகுலேஸ்வர ஆலயத்தில் அமைந்துள்ள தீர்த்தத்தில் பெண் ஒருத்தி நீராடி குதிரை முகம் நீங்கப்பெற்ற செய்தி ஊடாகவும் தீர்த்தத்தை தரிசித்து நீராடி வழிபாடு செய்வதன் மூலமாக ஆன்மாக்களின் துன்பம் நீங்கப்படுகிறது. அதன் காரணமாக இறையருள் சாத்தியமாகின்றது. இத்தகைய வழிபாட்டினைச் செய்வதற்கு ஆன்மிகச் சுற்றுலா வாய்ப்பாக அமைகிறது.

## கலைகளும் சுற்றுலாவியலும்

கலை வெளிப்பாட்டு நிலையமாக ஆலயங்கள் விளங்குகின்றன. சிலப்பதிகாரத்தில் கலைகள் அறுபத்தினான்கு என்று கூறப்படுகிறது. "எண்ணெண் கலையும் இசைந்துடன் போகஞ்", (சிலப்பதிகாரம், 1998, வேனிற்காதை 8.64) "எண்ணெண் கலையோர் இருபெருவீதிஞ்" (சிலப்பதிகாரம், 1998, ஊர்காண் காதை, 14.165) என்பதிலிருந்து கலை அறுபத்தினான்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கலைகளுள் நுண்கலைகள் சிறப்பிடம் வகிக்கின்றது. அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நடனக்கலை, இசைக்கலை முதலானவையாகும். இக்கலைகளின் வளர்ச்சிப் போக்குகளும் சமூக ஆன்மிக வளர்ச்சிகளுக்கும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புண்டு.

நுண்கலைகள் இறைவனை நெருங்குவதற்குரிய சாதனங்கள் ஆகும். தெய்வ உணர்வு பெற்ற சான்றோர்களது உள்ளத்தில் பக்தியின் மூலமாக உதித்த தம் கருத்துக்களை உலகம் அனுபவிக்க வேண்டுமென நினைத்தனர். அவ்வெண்ணங்கள் ஒவ்வொரு வகையான கலைகளாயின (கேசவன், 2021, ஜீ.7). இத்தகைய கலை வெளிப்பாட்டின் முழுத்தன்மையினையும் பிரதிபலிக்கும் இடங்களாக ஆலயங்கள் விளங்கின. இவ்வாறான ஆலயங்களை ஆன்மிகச் சுற்றுலா எனும் பெயரில் சென்று வழிபட்டு அங்கே உள்ள கலையம்சங்களைப் பார்க்கின்ற போது இறைவனின் வியத்தகு அம்சங்கள் அவர்களுக்குப் புலப்பட்டு இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் இடையிலான நெருக்கம் ஏற்படுகிறது. அதன் மூலம் இறையன்பு அதிகரித்து அவன் அருள் சாத்தியமாகும். அதன் வழி ஆன்மாவின் இலக்கான விடுதலைக்கு வழி வகுக்கும். இச்செயற்பாட்டினைத்தான் எமது நாயன்மார்கள் ஆலயங்கள் தோறும் சென்று இறைவனைத் தரிசித்து உணர்ந்து தாமும் பாடி, ஆடி மகிழ்ந்து இறைவனோடு ஐக்கியமாகி அவன் அருள் பெற்று விடுதலை அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## நால்வகை நெறிகளும் சுற்றுலாவியலும்

சைவசித்தாந்தம் ஆன்ம விடுதலை அடைவதற்குரிய வழியாக நான்கு நெறிகளைக் குறிப்பிடுகிறது. அவை பணி நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, காதல் நெறி என்பனவாகும். இவை முறையே தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம்,

சன்மார்க்கம் எனவும், சரியை, கிரியை, யோகம், ஞானம் எனவும் பிற பெயர்களால் சுட்டப்படும். இதனையே,

*‘சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்திர மார்க்கத்*

*தாசமார்க்கம் என்றுஞ் சங்கரனையடையும்*

*நன்மார்க்கம் நால் அவைதாம் ஞானயோக*

*நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்’*

(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.270)

எனவும் அருணந்திசிவாச்சாரியார் எடுத்துரைத்துள்ளார். இந்த நல்வகை மார்க்கங்களைக் கடைப்பிடிக்கின்ற வகையில்,

*‘முத்திகள் சாலோக்கிய சாமீப்பிய சாருப்பிய*

*சாயுச்சியம் என்று சதுர்விதமாக’*

(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.270)

எனச் சித்தியார் நான்கு விதமான முக்தி கிடைக்குமென எடுத்துரைக்கின்றது. இத்தகைய நால்வகை நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு ஆன்மிகச் சுற்றுலா பாரிய பங்களிப்பினை ஆற்றிவருகின்றமையை பின்வரும் விபரிப்புகளின் ஊடாக தெளிவடைய முடியும்.

**சரியை நெறியும் சுற்றுலாவியலும்**

இறைவனை புறத்தே மனத்தொடர்பின்றி உடம்பால் திருமேனியை நோக்கி வழிபடும் ஆரம்ப நிலைப்படியாக அமைவது சரியை ஆகும். சரியை எனப்படுவது திருக்கோயிலை கூட்டி மெழுகல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் அமைத்தல், பூக்கொய்து மாலை தொடுத்தல், உழவார பணி செய்தல், நித்திய, நைமித்திய வழிபாடாற்றலுக்குத் தேவையான குடம், கவசம், தீபக்கால், விசிறி, கண்ணாடி முதலியன ஆக்கித் தருதல், சிவபுராணம் அடியவர் வரலாறு போன்றவற்றை கேட்டல், படித்தல். திருத்தலங்களுக்கு பயணம் மேற்கொள்ளல் ஆகிய பணிகளைச் செய்தலாகும். இங்கே இறைவனை ஆண்டானாகவும் தன்னை அடிமையாகவும் கருதி வழிபடுவதனால் ‘தொண்டு நெறி’ எனவும் ‘தாசமார்க்கம்’ எனவும் அழைக்கப்படும்.

சரியா சாதனத்தின் இயல்பும் அதன் பயன்பாடும் சிவஞானசித்தியாரில்,

*“தாசமார்க்கம் சாற்றி சங்கரன் தன் கோயில்*

*தலம் அலகிட் டிலகுதிரு மெழுக்கும் சாந்;திப்ஞ்*

*..யாதுபணியீரென்று பணித்தவர் தம் பணியும்*

*இயற்றுவதிச் சரியை செய்வோர் ஈசன் உலகிருப்பவர்”*

(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.271)

எனவரும் பாடலடி விளக்கி நிற்கிறது.

இவ்வழிபாட்டில் திருக்கோயிலில் திருவிளக்கிடுதல் முதலியன சரியையில் சரியை எனவும் மூர்த்தியை வழிபடுதல் சரியையில் கிரியை என்றும் வழிபடும் கடவுளையும் சிவனையும் தியானித்தல் சரியையில் யோகம் எனவும் இச்செய்கைகளின் மூலம் ஓர் அனுபவம் வாய்க்கப்பெறின் சரியையில் ஞானம் என்பதும் கண்டறியப்படும் ஆன்மிகச் சுற்றுலாவியலை மேற்கொள்ளும் பெரும்பாலான மக்கள் இவ்வழிபாடாற்றுவதை நாம் நடைமுறை வாழ்வியலில் பார்க்கமுடியும்.

சரியை நெறியில் நின்றவர்களாக அப்பூதியடிகள், நாவுக்கரசர், திருக்குறிப்புத் தொண்ட நாயனார், கண்ணப்ப நாயனார் போன்றோரைக் குறிப்பிடலாம். சரியை நெறியை கடைப்பிடித்து ஒழுகிய நாவுக்கரசர் “நிலைபெறுமா ரெண்ணுதியே நெஞ்சே நீ வா நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்ஞ்” (திருநாவுக்கரசர் தேவாரம், பா.6555) என்று சரியைத் தொண்டுகளை விளக்கியிருக்கின்றார். சரியை நெறிமூலம் சாலோப முத்தி கிடைக்கப் பெறுகின்றது.

ஆன்மிகச் சுற்றுலா எனும் அடிப்படையில் ஊர் சுற்றுதலும் சரியையே ஆகும். ஊர் சுற்றுதல் என்று நாட்டார் வழக்காற்றில் குறிக்கப்படும் தலப்பயண யாத்திரையும் கூட நம்முடைய மனதையும் உடலையும்

வளப்படுத்துவன. ஆரம்ப காலங்களில் சுற்றுலாவியலும் தலப்பயணத்தில் இருந்தே ஆரம்பித்திருப்பதாக அறிய முடிகிறது. சாஸ்த்திர நூலாகவும், ஞானநூலாகவும் விளங்கும் திருமந்திரமே இத்தலப்பயணத்தை ஞானத்திற்கு அடிப்படை என்று குறிப்பிடுகின்றது. சான்றாக,

*"நாடும் நகரமும் நற்றிரு கோயிலும்*

*தேடித் திரிந்து சிவபெருமான் என்று*

*பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்*

*கூடிய நெஞ்சத்து கோயிலாய் கொள்வனே"*

*(வரதராஜன், 2010, திருமந்திரம், பா.1445)*

என்ற மந்திரத்தால் அறியலாம். இச்சரியை நெறியில் ஆன்மிகச் சுற்றுலாவியலின் பங்கு என்ன இருக்கிறது என்று ஆராய்ந்தால் ஊர் சுற்றுவது கோயில் சுற்றுவது என்பது ஏதோ பொழுதுபோக்கும் செயல் அல்ல. நம்முடைய மனதை விசாலமடையச் செய்யும் செயலாகும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, மனிதநேயம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வு, சகிப்புத்தன்மை, பகுத்துண்டு பல்லுயிர் போற்றும் குணம் ஆகியன ஆன்மிகச் சுற்றுலாவியலினால் ஏற்படுகின்றது என்பது உண்மை. எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனை ஒவ்வொரு தலமாக ஊராகச் சென்று பார்வையிடுதல், வெவ்வேறு இடங்களில் வாழும் மக்களை உயிர்க்குலத்தை இயற்கை சார்ந்த பகுதிகளைக் காணல் போன்ற பல்வேறு நடைமுறைப் பயன்களை ஊர் சுற்றும் சரியை நெறியின் மூலம் பெறமுடியும். இதன் மூலம் நடைமுறை வாழ்வியலில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்ம விடுதலைக்குரிய பாதைகளில் ஒன்றான சரியை நெறியைப் பின்பற்றுவதற்கு ஆன்மிகச் சுற்றுலாவியல் பங்களிப்புச் செய்வதனை அறிந்து கொள்ள முடிகிறது.

## கிரியை நெறியும் சுற்றுலாவியலும்

கிரியை மார்க்கமானது இறைவனை அர்ச்சித்தல், போற்றுதல் போன்றவற்றைச் செய்வதாகும். புதிய நறுமண மலர், அமுது, திருமஞ்சனம் ஆகியவை வழிபாட்டில் இடம்பெறுகின்றன. இது அகத்தோடு புறமும் கலந்த பயிற்சியாக உடல் உறுப்புகளைக் கொண்டு செய்யும் வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுவதாக அமைகின்றது, இறைவனுக்கு அன்பையும், புகழையும் அர்ப்பணம் செய்து உயிரினைப் பதியிடத்து நெருங்கச் செய்வதில் கிரியை மார்க்கம் துணை புரிகிறது. கிரியையிலே பக்தன் தந்தையின் தொண்டிற்காக பயபக்தியுடன் கட்டுப்பாடு கடமையுணர்வு உள்ள மகனாகக் கருதி பணிந்து ஒழுகுகிறான். தந்தை மகன் எனும் "மகன்மை நெறி" தொடர்பு இதில் முழுநேரமும் இறைவனுக்கு பணி செய்யவே செலவிடுகின்றான். இதனை அருணந்திசிவாச்சாரியார் வருமாறு உரைக்கிறார்.

*"ஷபுத்திரமார்க் கம்புகளில் புதியவரை போது*

*புகையொளிமஞ் சனம் அமுது முதல் கொண்டடைந்து*

*நித்தலும் இக்கிரியையினை இயற்றுவோர்கள்*

*நின்மலன்தன் அருகிருப்பார் நினையுங்காலே"*

*(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.272.)*

*"என்கடன் பணி செய்து கிடப்பதே"*

*(திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம், பா.9.)*

என அப்பர் பெருமான் கூறியது போல முதன் மார்க்கத்தை விட இறைவனுடன் மிக நெருங்கிய மார்க்கம் இது. ஆன்மா இறைவனது சற்புத்திரனாக நெருங்கிச் செல்ல உதவுவதால் இம்மார்க்கம் 'சற்புத்திர மார்க்கம்' என்று அழைக்கப்படுகின்றது.

இம்மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். இதனூடாக சாமீப முத்தியும் அடையலாம். இதற்குள் பூசைக்குரிய மங்கலப் பொருட்களைத் திரட்டுதல் கிரியையில் சரியை, புறத்தில் பூசித்தல் கிரியையில் கிரியை, அகத்தில் பூசித்தல் கிரியையில் யோகம், என்றும் இதனூடாக வழிபட்டவர்களுக்கு அனுபவம் வாய்க்கப்பெறுதல் கிரியையில் ஞானம் என்பதாகவும் அமையும். இத்தகைய கிரியை வழிபாட்டு நெறிகள்

நடைமுறை வாழ்வியலிலும் ஆன்மிகச் சுற்றுலாவினை மேற்கொள்பவர்களினாலும் கடைப்பிடிக்கப்படுவதனை காணமுடிகின்றது. அந்தவகையில் சைவசித்தாந்தம் கூறும் ஆன்ம விடுதலை அடைவதற்குரிய வழிகளில் ஒன்றான கிரியை நெறியினைக் கடைப்பிடிப்பதற்கு ஆன்மிகச் சுற்றுலாவியல் பாரிய பங்களிப்பினை ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### யோக நெறியும் சுற்றுலாவியலும்

யோகம் என்பது வடமொழிக்குரிய சொல்லாகும். இதன் தமிழ் பதம் "கூடுதல்" அல்லது "ஒன்றுதல்" என்பதாகும். ஆன்மாவினுடைய மனம், புத்தி, சித்தம் ஆகிய மூன்றும் இறைவனோடு ஒன்றித்து நின்று அதன்வழி அவற்றால் இறைவனைக் கூடுதல் "யோகம்" என்று கூறப்படும் (சுப்புரெட்டியார், 2004, p.292). இந்நெறி தத்தம் வழிகளில் செல்லுகின்ற புலன்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. பாலிலேயே நெய் இருந்தாலும் கடைந்தெடுக்கப்படும் வரை அது வெளிப்படுவதில்லை. அது போலவே இறைவன் நம் அனைவருக்குள்ளும் உள்ளானாயினும் அவனை நாடுபவர்களுக்கே அவன் வெளிப்படுவான். இறைவனோடு ஒன்டறச் செய்ய யோக வழிபாட்டில் இயமம், நியமம், சமாதி, பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், ஆசனம் எனும் எட்டு பயிற்சிகள் காணப்படுகின்றன. அவை அட்டாங்க யோகம் என்றழைக்கப்படுகின்றது.

யோக சாதனத்தின் இயல்பினையும் சிவஞானசித்தியார் பின்வரும் பாடல்களில் விளக்குகிறது.

*"சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்து வளியிரண்டும்*

*சலிப்பற்று முச்சதுர மதலான ரங்கள்ஞ்.*

*... உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்*

*உழத்தல் உழந் தவர்சிவன்தன் உருவத்தைப்பெறுவர்"*

(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.211.)

என்கிறார். யோக நெறி நின்றவர்களாக சுந்தரர், சேரமான் பெருமாள், திருமூலர் போன்றவர்களைக் குறிப்பிடலாம். யோகநெறி மூலம் சாரூப முத்தி கிடைக்கப் பெறுகிறது. இம்முறை இறைவனைத் தோழானாகக் கண்டு வழிபாடாற்றுவதனால் 'சக மார்க்கம்' என்றும் அழைக்கப்படும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் சுந்தரமூர்த்தி நாயனார். அத்துடன் யோகத்தின் சரியைக்குள் இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் என்பன அடங்கும். யோகத்தில் கிரியைக்குள் பிரத்தியாகாரமும் தாரணையும் அடங்கும். யோகத்தில் யோகம் என்பதற்குள் தியானமும் சமாதி யோகத்தில் ஞானமுமாகும்.

இத்தகைய யோக சாதனமும் நடைமுறை வாழ்வியலில் காணப்படுகிறது. குறிப்பாக உலக நாடுகளில் முனிவர்கள் யோக நிலையில் இருந்து தவம் செய்து வருகின்றமையும், அத்தகைய முனிவர்களை ஆன்மிகச் சுற்றுலாவியல் எனும் அடிப்படையில் செல்பவர்கள் தெய்வமாகக் கண்டு வழிபட்டு அதன் மூலம் இறை அருள் உணர்ந்து வழிபாடுகள் செய்து வருகின்றமையும் தக்க எடுத்துக்காட்டாகும். மேலும் கதிர்காமத்திலே யோகநிலையில் இருந்து சமாதி அடைந்தவர்களை வழிபட்டு வருகின்றமை, பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், ஆலயங்கள் என்பவற்றில் யோகா சார்ந்த செயற்பாடுகள் செய்யப்படுதல், யோகா மன்றங்கள் காணப்படுதல், ஆலயங்களில் அட்டாங்க யோகம், பஞ்சாங்க நமஸ்காரம், தியானம் முதலியன செய்து வருகின்றமையும் நடைமுறை வாழ்வியலில் யோகத்தினது வகிபங்கினை எடுத்துக்காட்டுவதோடு மட்டுமல்லாது ஆன்மிகச் சுற்றுலாவியலின் மூலம் பயணம் சென்று பார்ப்பவர்களும் இவ்வாறான செயற்பாடுகளைச் குறித்த இடத்தில் மன நிறைவிற்காகவும் மேற்கொண்டு வருவதனைக் காணமுடிகிறது.

### ஞான நெறியும் சுற்றுலாவியலும்

ஞானநெறியானது அறிவு தொழிற்படும் வகையில் கைகூடும். இங்கு வழிபடப்படும் இறைவன் உருவம், அருவம், அருவுருவம் ஆகிய நிலைகளைக் கடந்தவர். சரியையில் உருவமும், கிரியையில் அருவுருவமும், யோகத்தில் அருவமும் வழிபடப்பட்ட

நிலையில் ஞானம் என்பது இவை மூன்றையும் கடந்த அறிவு வடிவாக உள்ள பரம்பொருள் அறிவிக்க உள்ளவாறு அறியும் வழியாக உள்ளது. இந்த ஞானம் நான்கு வகைப் படிநிலைகளை உடையது. அவை கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை என்பனவாகும். ஞானத்தின் மூலம் சாயுச்சிய முத்தி கிடைக்கப்பெறுகின்றது. இதனைச் சிவஞானசித்தியார்,

*“பின்மார்க்கச் சிவனுடைனாம் பெற்றி ஞானப்*

*பெருமையுடையோர் சிவனைப் பெறுவர் தானே”*

*(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.274)*

என்ற செய்யுள் மூலம் விளக்கி நிற்கிறது. ஞான நெறியிலே இறைவனைக் குருவாகவும் தன்னைச் சீடனாகவும் கொண்டு வழிபாடாற்றுவார்கள். சித்தியார் ஞானமார்க்கம் பற்றி,

*“அஞ்ஞானம் விடப்பந்தம் அறு முத்தியாகும்*

*ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்*

*இறைவனடி ஞானமே ஞானம் என்பர்”*

*(சிவஞானசித்தியார் சுபக்கம், 2010, பா.279)*

எனும் செய்யுள் ஊடாக எடுத்துக்காட்டு கிறார். ஆகவே ஞானம் ஒன்றினாலேயே பரமுத்தியைப் பெறமுடியும் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. அவர்கள் ஞானமார்க்கத்தால் கிடைக்கப்பெறும் பரமுத்தியை மேலானதாகக் கருதுகின்றனர். ஏனைய சரியை, கிரியை, யோகம் மூன்றினாலும் பதமுத்தி எய்த முடியும் எனக் கூறப்படுகிறது, சாலோகம், சாமீபம், சாரூபம் என்பன முறையே சிவ உலகத்தை அடைதல், சிவனை அண்மித்தல், சிவ உருவத்தைப் பெறல் எனும் பொருளைச் சுட்டுவதாகும்.. சாயுச்சியம் என்பது சிவனுடன் இணைதலை சுட்டி நிற்கின்றது. இந்நிலைப்பாட்டினை உமாபதி சிவாச்சாரியார்,

*“தாடலைபோல் கூடியவை தானிகழா வேற்றின்ப*

*கூடலை நீ யேகமெனக் கொள்”*

*(திருவருட்பயன், பா.74.)*

எனத் திருவருட்பயன் ஊடாக ஆன்மாவும் இறைவனும் இரண்டறக்கலந்து நிற்கும் முத்தி நிலையை தாள்+தலை என்ற உதாரணத்தால் விளக்கியிருப்பதனைக் காணலாம். தாள் தலை எனும் இரு சொற்கள் தாடலை எனும் ஒரு சொல்லாய் அத்துவிதப்பட்டு இணைந்திருப்பது போல முத்தி நிலையில் ஆன்மாவும் சிவமும் இரண்டற்ற வகையில் ஒன்றாய்க் கலந்திருக்கும் நிலை என்பது சித்தாந்த முடிபாகும். இதனை அருணந்திசிவாச்சாரியார்,

*‘ஒன்றாகாமல் இரண்டாகாமல்*

*ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்’*

*(பொன்னையா, ஆ., 2003, ப.257.)*

என இருபா இருபஃதில் விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாழ்வின் உய்வுக்கும் உயர்வுக்கும் பொன்னடிகளைச் சரணடைதலே சிறந்த உபாயமாக உள்ளமையினால் அருணந்திசிவாச்சாரியாரும், “இறைஞானம் தந்து தாள் ஈதல்” எனும் தன்மையினைக் குறிப்பிடுதல் கவனிக்கத்தக்கதாகும் (திருவிளங்கம், 2010, சிவஞானசித்தியார் சுபக்கம், பா.290). இவ்விறைவனடி சேர்தல் என்பது ஆணவ ஒடுக்கத்திலேயே விடுதலை எனும் பேரானந்த நிலை சாத்தியமாகும். இந்நிலை (பரமுத்தி) அடைந்தவர்கள் பழத்தில் சுவையும், மலரில் மணமும், நெருப்பில் சூடும் போல சிவத்தில் கலந்திருக்குமென முன்னோர் சுட்டியிருப்பதனை உண்மை விளக்கம் தெளிவுபடுத்தி நிற்கிறது. இறைவனும் ஆன்மாவும் கூடிநிற்கும் நிலையை சித்தாந்தம் இரும்பை காந்தம் அணைப்பது போலவும், தீயானது இரும்பைத் தன்வயமாக்கி வைத்திருப்பது போலவும், நீரோடு கலந்த உப்புப் போலவும் அத்துவித முறையில் கலந்து இருக்கும் எனக் கூறுகின்றது. இவ்வகையில் ஆன்மா இரண்டற இணைந்து சிவானுபூதிப் பேரின்பத்தை உய்த்து இன்புறுவது சைவசித்தாந்தத்தின் இறுதி இன்ப நிலையான விடுதலையாகும்.

## முடிவுரை

இவ்வாய்வின் பிரகாரம் ஆன்ம விடுதலையடையும் நோக்குடன் பயணிக்கும் ஒருவர் சரியை, கிரியை, யோகம், ஞானம் போன்ற சைவநாற்பாதங்களைக் கடைப்பிடிப்பதோடு இறைவனின் அருள் கிடைக்கக்கூடிய சாதனங்களாகிய விபூதி, உருத்திராட்சம் அணிதல், ஐந்தெழுத்து மந்திரத்தை நினைத்தல், அகப்பூசை செய்தல், இறைபணி நிற்றல், அடியார் வழிபாடு செய்தல் முதலிய செயற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனவும் அதன் வழி ஆன்ம விடுதலை சாத்தியமாகுமெனவும் சைவசித்தாந்தம் குறிப்பிடுகிறது. இத்தகைய செயற்பாடுகள் அனைத்தும் நடைமுறை வாழ்வியலில் ஆன்மிகச் சுற்றுலா செல்பவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையினை இவ்வாய்வின் வழி அறியமுடிகிறது. ஆகவே சைவசித்தாந்தம் கூறும் ஆன்ம விடுதலைக்கு ஆன்மிகச் சுற்றுலா பாரிய பங்களிப்பினை நல்கி வருவதனை இவ்வாய்வு தெளிவுபடுத்தியுள்ளமை மட்டுமல்லாது சமகாலத்தில் இவ்வுலகில் வாழ்கின்ற அனைத்து மக்களும் ஆன்மிகச் சுற்றுலாவினை மேற்கொண்டு ஒவ்வொருவரும் ஆன்ம விடுதலை அடைய முடியுமென்பதனையும் எடுத்துக்காட்டிள்ளது.

## Reference


Chanthirasekaram, S., Muhamad musthapa, A., & Sasivathani, T. (2013). *Suttulap poruliyalukku Or Arimukam*. South Eastern University of Sri Lanka: Economic Forum.

Eswaran, S. (2006). *Suttulaviyal*. Chennai: Pavai Publication.

Iraththinasapapathi, V. (Pathippu). (1988). *Mekanda Saththirankal.* Chennai: University of Madras.

Kanapathippillai, S. (1967*). Kanthapuranam Thadsakandam urai*. University of Peradeniya: Hindu Student Socity.

Kesavan, S. (2021), *Solarkala Thirukkoyit Sitpankalil Isaikkaruvikal.* Batticaloa: Maddakkalappu Mavadda Eluththalar Socity.

Kesavan, S. (2021). *Inthu Nakarikam (Samayamum Thaththuvamum)*. Batticaloa: Maddakkalappu Mavadda Eluththalar Socity.

Maraimalaiyadikal, (1966). *Paddinappalai Araichchiyurai.* Chennai: Saiva Siddhanta Nootpathippuk Kalakam.

Mathiventhan, M. (2021). *Suttula.* Tamil naadu Arasu: Suttula Panpadu Aranilaiyankal Thurai.

Ponnaiya, A. (2003). *Irupa Irupakthu.* Chennai: Saivasiddhanta Nootpathippu Kalakam.

Seenivasan, R. (1998). *Silappathikaram Moolamum Thiranaivum.* Chennai: Aniyakam.

Selvamanokaran, T. (2017). *Kashmeera Saivamum Saiva Siddhantamum.* Colombo: Cemamadu Pathippakam.

Shina, P. C. (1998). *Tourism Evolution, Scope*. New Delhi: Nature and Organisation.

Suppureddiyar, N. (2004). *Saiva Siddhantam Or Arimukam*. Chennai: Kalaka Veliyidu.

Thankamany, M. (2006). *Suttulaiyal Or Arimukam.* Chennai: Konku Pathippakam.

Thirunavukkarasu, V. (2014). *Ilakkiyam Kaddum Suttula Maiyankal – Or Aivu* (Kalanithippadda Aivedu). Chennai: University of Madras.

Thiruvilangam, M. (urai). (2010). *Sivajanasiththiyaar supakkam*. Jaffna: sivathondan sapai.

Vachchiravelmuthaliyar, K. (n.d.). *Thiruvarudpayan*. University of Peradeniya: Hindu Student Socity.

Varatharajan, J. (2010). *Thirumanthiram*. Chennai: Palaniyappa Pirathars.

Vethanathan, M. (pathippu). (2009). *Sivajanapodha sitturaiyum vilakkamum*. Jaffna: Saiva siddhanta aaivu niruvanam.